செ.வெ.எண்: 59/2019 நாள்: 31.07.2021

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகக் கூட்டரங்கில், இன்று (31.07.2021) மாதாந்திர விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தில் இருந்து பல்வேறு விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முந்தைய கூட்டங்களில் விவசாயிகள் வழங்கிய மனுக்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து துறை வாரியாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுதாரர்கள் முன்னிலையில் விவாதிக்கப்பட்டதுடன் விவசாயிகளின் அனைத்து கோரிக்கைகளையும் கால தாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகளிடமிருந்து 84 கோரிக்கை மனுக்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, வேளாண் உற்பத்திக்குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.மனோகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.மகாதேவன், துணை ஆட்சியர்கள் உட்பட அனைத்துத் துறை அலுவலர்கள் விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**